GOOGLE SEARCH : DMTECH10TH

**தேர்வு எண்:_______________________,பத்தாம் வகுப்பு,_______பிரிவு,அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி,நெமிலி**

# அரசு மாதிரி வினாத்தாள் 2019-2020

## சமூக அறிவியல்-பத்தாம் வகுப்பு

**காலம்: 3.30 மணிநேரம் + 15 நிமிடங்கள்** **மதிப்பெண்கள்: 100**

**அறிவுரை:** *1)அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாக உள்ளதா என்பதை சரிபார்த்துக்கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.*

*2)நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.*

**குறிப்பு:** *இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளை கொண்டது.*

### பகுதி-1 (14 மதிப்பெண்கள்)

**இப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையளிக்கவும்:**

1.இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையை செய்து கொண்டது?

அ)ஜெர்மனி ஆ)ரஷ்யா இ)போப் ஈ)ஸ்பெயின்

2.இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது கூட்டம் எங்கு நடைபெற்றது?

அ)மெரினா ஆ)மைலாப்பூர் இ)செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஈ)ஆயிரம் விளக்கு

3.சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதி யார்?

அ)T.முத்துசாமி ஆ)P.S.சிவசாமி இ)V.S சீனிவாச சாஸ்திரி ஈ)G.A.நடேசன்

4.இந்தியாவில் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட சென்னை தொழிற்சங்கம் உருவாக்கப்பட்ட ஆண்டு?

அ)1918 ஆ)1917 இ)1916 ஈ)1914

5.கூற்று: பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டு கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.

காரணம்: மையப்படுத்தப்பட்ட தலைமை இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.

அ)கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.

ஆ)கூற்று தவறு,காரணம் தவறு.

இ)கூற்று மற்றும் காரணம் சரி.கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமாகும்.

ஈ)கூற்று மற்றும் காரணம் சரி.கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமல்ல.

6.பொருந்தாத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

அ)காதர் ஆ)பாங்கர் இ)வண்டல் மண் ஈ)கரிசல் மண்

7.ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு

அ)சமவெப்பக்கோடு ஆ)சம மழைக்கோடு இ)சம அழுத்தக்கோடு ஈ)அட்சக்கோடு

8.முதல் காகித தொழிற்சாலை தொடங்கப்பட்ட இடம்

அ)ராணிகஞ்ச் ஆ)துர்க்காபூர் இ)ஹூக்ளி ஈ)பாலிகஞ்ச்

9.மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு

அ)ஒளிப்படவியல் ஆ)மக்களியல் இ)ஆடற்கலையியல் ஈ)மக்களடர்த்தி

10.தமிழ்நாட்டின் அட்சப்பரவல்

அ)$8^0$ 5'வ-$13^0$ 35'வ ஆ)$8^0$ 5'தெ-$13^0$ 35'தெ இ)$8^0$ 0'வ-$13^0$ 5'வ ஈ)$8^0$ 0'தெ-$13^0$ 05'தெ

11.பின்வரும் கூற்றினை காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1)பஞ்ச சீலம் 2)பொக்ரானில் அனுச்சோதனை

3)இருபது ஆண்டுகள் ஒப்பந்தம் 4)முதலாவது அனுச்சோதனை

அ)1,3,4,2 ஆ)1,2,3,4 இ)1,2,4,3 ஈ)1,3,2,4

12.உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது (ஆண்டுகளில்)

அ)58 ஆ)60 இ)62 ஈ)65

13.தவரான கூற்றினை / கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்.

1)இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூல காரணம்.

2)கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழில்துறை ஆகும்.

3)கருப்பு பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலக்காரணம்.

4)வரிவிகிதம் குறைவாக இருக்கும்போது,அதிக அளவில் கருப்புப்பணம் உருவாக்கப்படுகிறது.

அ)1 மற்றும் 2 ஆ)4 இ)1 ஈ)2 மற்றும் 3

14.உணவு மற்றும் சத்துணவு பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள்

அ)கிடைத்தல் ஆ)அணுகுதல் இ)முழு ஈடுபாடு ஈ)அனைத்தும்

**பகுதி-2 (20 மதிப்பெண்கள்)**

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**(28வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

15.மன்றோ கோட்பாட்டை விளக்குக.

16.மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

17 தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.

18.மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களை குறிப்பிடுக.

19.இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.

20.இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.

21."பன்னாட்டு வணிகம்" வரையறுக்க.

22.தமிழ்நாட்டில் காணப்படும் மாங்குரோவ் காடுகளைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

23.நிதி மசோதா என்றால் என்ன?

24பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

25.தனிநபர் வருமானம் என்றால் என்ன?

26.உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின்படி உணவு பாதுகாப்பு என்பதனை வரையறுக்க.

27.வரி வரையறுக்க.

28.புதுப்பிக்கக் கூடிய வளங்கள் பற்றி நீவிர் அறிவதென்ன?

**பகுதி-3( 50 மதிப்பெண்கள்)**

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**(42வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

***29.கோடிட்ட இடங்களை நிரப்புக:***

*1)ஐரோப்பிய குழுமத்தின் தலைமை________________________ நகரில் அமைந்துள்ளது.*

*2)தேயிலை மற்றும் காஃபி விளைவதற்கு உகந்த மண்________________________ஆகும்.*

*3)_________________________________தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ஆவார்.*

*4)________________________ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டபிடிக்கப்பட்டது.*

*5)தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம்_________________________________*

***30.பொருத்துக:***

*1)ஹிண்டன்பர்க் - டிடு மீர்*

*2)வாஹாபி கிளர்ச்சி - காளையார் கோவில்*

*3)தனித்தமிழ் இயக்கம் - ஜெர்மனி*

*4)சிங்மென் ரீ - மறைமலை அடிகள்*

*5.மருது சகோதரர்கள் - தென்கொரியா*

DM TECH

***31.பொருத்துக:***

*1)மேசகான் கப்பல் கட்டும் தளம் - நிலக்கரி*

*2)கருப்பு தங்கம் - நந்தாதேவி*

*3)ஹிராகுட் - பிரம்ம்புத்ரா*

*4)உயிர்க்கோளப்பெட்டகம் - மகாநதி*

*5)சாங்போ - மும்பை*

***32.அ)வேறுபடுத்துக:***

*1)வானிலை மற்றும் காலனிலை*

*2)வேளாண் சார்ந்த தொழிலகம் மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகம்.*

***ஆ)காரணம் கூறுக:***

*1)மழைநீர் சேகரிப்பு அவசியம்.*

*33.ஐக்கிய நாடுகளின் சபையின் அமைப்பு,செயல்பாடுகளை ஆய்வு செய்க*

*34.வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தைப் பற்றி குறிப்பு எழுதுக.*

*35.தென்மேற்கு பருவகாற்று குறித்து எழுதுக.*

*36 தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதுக.*

*37.அடிப்படை உரிமைகளைப் பற்றி எழுதுக .*

*38.பஞ்சசீல கோட்பாடுகளைப் பற்றி விவரிக்க.*

*39.தொழிற்தொகுப்புகள் வெற்றி பெற முக்கியப் பண்புகள் யாவை?*

*40.GDPயைக் கணக்கிடும் முறைகள் யாவை?*

*41.காலக்கோடு வரைக:1920-1940வரையுள்ள ஏதேனும் 5 நிகழ்வுகள்*

*42.உலக வரைபடத்தில் குறிக்க:1)கிரேட் பிரிட்டன் 2)ஜெர்மனி 3)ரஷ்யா 4)ஹிரோஷிமா 5)ஹவாய் தீவு.*

## பகுதி-4 (16மதிப்பெண்கள் )

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.**

**43.அ) பால்கன் போர்கள்:**

1) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?

2) முதல் பால்கன் போரின் விளைவுகள் என்ன?

3) இப்போரில் வெற்றி பெற்றவர்கள் யாவர்?

4) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயர் என்ன?

**ஆ) சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவம்**

1) சுபாஷ் சந்திர போஸ் ஜப்பானை எப்படிச் சென்றடைந்தார்?

2) இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவுக்குத் தலைமை ஏற்றவர் யார்?

3) சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய ராணுவத்தை எவ்வாறு மறுசீரமைப்பு செய்தார்?

4) சுபாஷ் சந்திர போஸால் வழங்கப்பட்ட முழக்கம் யாது?

**( அல்லது )**

**43.இ) ராமலிங்க அடிகள்**

1) ஜீவகாருண்யம் என்றால் என்ன?

2) அருட்பா என்றால் என்ன?

3) சமரச வேத சன்மாரக்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பைக் குறிப்பிடுக.

4) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?

**ஈ) வேலூர் புரட்சி**

1) வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?

2) இராணுவத்தில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியவர் யார்?

3) புரட்சியின் போது முதலில் பலியானவர் யார்?

4) புரட்சியாளர்களால் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டவர் யார்?

**44.கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

1) ஆரவல்லி மலைத்தொடர் 2) காவிரி ஆறு 3) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை

4) அகஸ்திய மலை உயிர்க்கோளப் பெட்டகம் 5) கரிசல் மண் காணப்படும் முக்கியப்பகுதி

6) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம் 7) தமிழ்நாட்டில் உள்ள அணுமின் நிலையம்

8) மும்பை முதல் கொல்கத்தா வரையிலான ரயில் பாதை

**( அல்லது )**

**44.கொடுக்கப்பட்ட தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**

1) நீலகிரி குன்றுகள் 2) சோழமண்டல கடற்கரை 3) ஏதேனும் நெல் விளையும் பகுதி

4) பவானி சாகர் அனை 5) தூத்துக்குடி துறைமு 6) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்

7) பழவேற்காடு ஏரி 8) கன்னியாகுமரி.

*ENTER-DMTECH10TH.BLOGSPOT.COM-FOR MORE GUIEDS AND STUDY MATERIALS (OR) SCAN THE QR CODE*